**கேகாலை மாவட்டத்தின் 14 கமநல சேவை செயற்குழுக்ம - 2022**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** கேகாலை மாவட்டத்தின் 14 கமநல சேவை செயற்குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்புக்களுடனான முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 2000 இன் 46 கொண்ட கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58 (1) ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** கேகாலை மாவட்டத்தின் 14 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக விநியோகிக்கப்பட்டிருந்த 14 கணக்காய்வு அறிக்கைகளில் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட அபிப்பிராயம் வெளியிடப்பட்டுள்ளதுடன், முனைப்பழியாக்கப்பட்ட அபிவிப்பிராயத்திற்கு காரணமாகியிருந்த பொருன்மையான தவறுகள் கீழ் காண்பிக்கப்படகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்.

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்ககீட்டுக் கொள்கைகளுடன் இணங்காமைகள்.

| **செயற்குழு/ செயற்குழுக்கள்** | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| ருவன்வெல்ல, படுவத்த, அரநாயக, பனாவல | பெறுமானத் தேய்வு விகிதம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | **செயற்குழு** | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| (அ) | ருவன்வெல்ல, பின்னவல, தெலிவல, உஸ்ஸாபிடிய | பெறுமதி ரூபா 34,904,195 ஆன 111 ஜர்னல் குறிப்புகளிற்கான அங்கீகாரம் காணப்படவில்லை. (இணைப்பு - 1) | ஜர்னல் குறிப்புகளிற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் சரிசெய்கிறேன். | ஜர்னல் குறிப்புகளிற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | ருவன்வெல்ல | கடன்கொடுனர் பதிவேட்டின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியன்று ரூபா | கடன் கொடுனர் அட்டவணையில் அச்சுப் பிழையால் அத்தவறு | கடன்கொடுனர் பதிவேட்டை சரியாக பேணிச் செல்ல வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 610,400 ஆன 02 கடன்கொடுனர் மீதிகள் காணப்பட்ட போதும், நிதி நிலைமை கூற்றுக்களின் பிரகாரம் அவ்வாறான மீதி காணப்படவில்லை. | ஏற்பட்டுள்ளது. | |
| (இ) | யட்டோகொட | விவசாயிகளின் நலன்புரி நிதியத்திலிருந்து மீள் நிரப்பும் நோக்கில் செலவிடப்பட்ட ரூபா 592,258 தொகை மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | கடந்த கருத்திட்டத்திற்காக செலுத்த வேண்டியிருந்ததால் அத் தொகையை மீள் நிரப்ப முடியாது. | உரிய தொகையை மீள் நிர்பபிக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | யட்டோகொட | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டு முதல் நிலவும் ரூபா 2,707,992 ஆன தொங்கல் வரவு மீதி தீர்க்கப்பட்டிருக்வில்லை | அத் தொங்கல் கணக்கை தீர்த்து எதிர்காலத்தில் திருத்திய கணக்கறிக்கையை தயாரிக்கிறேன். | தொங்கல் கணக்கை தீர்க்க வேண்டும். |
| (உ) | பின்னவல | கடன் கொள்வனவு பெறுமதியொன்று கணக்குகளில் குறிப்பிடப்படாததால் மீளாய்வாண்டில் கொள்வனவு மற்றும் கடன்கொடுனர் ரூபா 132,050 வீதம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்கிறேன். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பின்னவல | கடன்படுனர் பதிவேட்டின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியன்று நிலவிய மீதியை விட ரூபா 159,300 கூடுதலாக அத்திகதியில் அம் மீதி நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கடன்படுனர் பதிவேட்டை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | துணை ஆவணங்கள், நிதிக்கூற்றுக்களுடன் இணக்கஞ் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். |
| (எ) | தெலிவல | 2021 ஆம் ஆண்டில் உரியவாறு ஒதுக்கீடுகள் செய்யப்படாததால் அவ்வாண்டிற்குரியதாக கடன்படுனர்களிற்கு செய்யப்பட்ட ரூபா 464,350 ஆன | கடந்த ஆண்டின் கொள்வனவு, கொள்வனவு பேரேட்டிற்கு உட்படுத்தப்படாததால் இவவாண்டின் செலவொன்றாக குறிப்பிடப்பட்டுள்ள | அந்தந்த ஆண்டுகளிற்கு உரியதாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவுவொன்று 2022 ஆண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டு இருந்தது. | து. | |
| (ஏ) | உஸ்ஸாபிடிய | கடந்த ஆண்டு நிதிக்கூற்றுக்களில் நிலவிய ரூபா 319,310 ஆன 18 நானாவித கடன்படுனர் மீதிகள் மற்றும் செலுத்த வேண்டிய மின்சார மற்றும் தொலைபேசி கட்டணம் ரூபா 14,883 தொகை திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டு புத்தகங்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தன. இதற்காக குழுத் தீர்மானமொன்று மாத்திரம் இருந்துடன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதாக தயவுடன் அறிவிக்கிறேன். | புத்தகங்களில் இருந்து அகற்றும்போது முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஐ) | உஸ்ஸாபிடிய | 02 கமநல அமைப்புகளிற்கு கடனிற்கு பொருட்கள் விற்கப்பட்டிருந்த போதிலும், அவை கணக்கீடு செய்யப்படாததால் ஆண்டுன் விற்பனை மற்றும் கடன்படுனர் ரூபா 135,845 வீதம் குறைத்து காட்டப்பட்டு இருந்தது. | கடன்படுனர் பதிவேட்டிற்கு உட்படுத்துவதென அறிவிக்கிறேன். | கடன் விற்பனை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | அரநாயக | மீளாய்வாண்டில் காசிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா ரூபா 1,441,756 ஆன 04 கொடுக்கல் வாங்கல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆண்டினுள் அறவிடப்பட்டு ஆண்டினுள்ளேயே செலுத்தப்பட்டுள்ளதால் அம் மீதி காசுப் பாய்ச்சலிற்கு உட்படுத்தப்படவில்லை. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | தெரணியகல | நிதிப் பிரமாணம் 264 இற்கு முரணாக, 4 சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட ரூபா 190,770 ஆன கொடுப்பனவுகளை உறுதி செய்து கொள்வதற்கான சான்றுகள் காணப்படல்லை. | அந்த வவுச்சர்களுக்கான பட்டியல்கள் இணைக்கப்பட்டு சரிசெய்யப்பட்டதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். | அனைத்து கொடுப்பனவுகளிற்கும் உறுதி செய்யும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஔ) | பெமினிவத்த, | பொதுப் பேரேட்டில் கடன்படுனர் கணக்கில் செய்யப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 751,115 ஆன வரவு மற்றும் மற்றும் செலவு செம்மையாக்கல்களின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | தவறுதலாக ஜர்னல் குறிப்பு இடப்படாததுடன் அதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| **செயற்குழு செயற்குழுகள்** | **விடயம்** | **நிதிக்கூற்றுக்கள் படி பெறுமதி** | **நேரொத்த அறிக்கை படி பெறுமதி** | **வேறுபாடு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | | |
| ருவன்வெல்ல | விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி கடன்படுனர் கணக்கு | 2,351,304 | 2,166,322 | 184,982 | விதை நெல் கடன் விற்பனை பிழையாக பேரேட்டிற்கு எடுத்தல். | பொது பேரேட்டின் மீதிகள் மற்றும் பரீட்சை மீதியின் மீதிகள் சமமாக வேண்டும். |
| அரநாயக, | வியாபார விற்பனை | 1,631,175 | 1,711,020 | 79,845 | நாளாந்தம் புத்தகங்களிற்கு உட்படுத்தும் போது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. | பொது பேரேட்டின் மீதிகள் மற்றும் பரீட்சை மீதியின் மீதிகள் சமமாக வேண்டும். |
| | வி.ஆ.உ.உ கடன்படுனர் கணக்கு | 280,835 | 363,230 | 82,395 | | |

### 1.3.4 தொங்கள் கணக்கு

| செயற்குழு/ செயற்குழுகள் | விடயம் | தொகை | தொங்கல் கணக்குகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | | |
| யட்டோகொட | நடைமுறை யல்லாத சொத்துக்கள் | 2,707,992 | 10 ஆண்டுகள் | இந்த தொங்கள் கணக்கை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | தொங்கள் கணக்கை தீர்க்க வேண்டும். |
| | நடைமுறை பொறுப்புக்கள் | 32,429 | 10 ஆண்டுகள் | பதில் வழங்கப்படவில்லை. | தொங்கள் கணக்கை தீர்க்க வேண்டும். |
| உஸ்ஸாபிடிய | செலவு மீதி | 12,661 | 5 ஆண்டுகள் | இது தொடர்பாக தேவையான அறிவுறுத்தல்கள் பெற்றுக்கொள்கிறேன். | தொங்கள் கணக்கை தீர்க்க வேண்டும். |
| தெலிவல | நடைமுறை சொத்துக்கள் | 4,900 | 5 ஆண்டுகள் | இந்த மீதியை கண்டறிந்து சீர் செய்கிறேன். | தொங்கள் கணக்கை தீர்க்க வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

| செயற்குழு / செயற்குழுகள் | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) ருவன்வெல்ல, பரகம்மன, தெரணியகல, யடியன்தொடை தெலிவல, படுவத்த, பனாவல, அம்பேபுஸ்ஸ | 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் (i) 52 (1) பிரிவு | ஒவ்வொரு பயிர் போகத்திற்கு முன்னரும் அதிகார பிரதேசத்திற்காக விவசாயத் திட்டம் ஒன்ற தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் 52 (1) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) ருவன்வெல்ல, யட்டோகொட, யடியன்தொடை தெலிவல, படுவத்த, | 1986 ஒக்டோபர் 21 திகதிய இலக்கம் 264 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கை | நிதி நிலைமை கூற்றின் பிரகாரம், நீண்ட நிலவிரும் 2022 திசெம்பர் 31 திகதிற்கு கிடைக்க வேண்டிய அறை வாடகை ரூபா | தகவல்களை கண்டறிய முடியமலிருந்த தால் அறவிட முடியாமல் இருந்தது. | அறை வாடகையை சுற்றிக்கை பிரகாரம் அறவிட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| தெதிகம, பனாவல, அம்பேபுஸ்ஸ, பெமினிவத்த, தெரணியகல, | | 1,183,793 ஆனது. | | |
| அம்பேபுஸ்ஸ, உஸ்ஸாபிடிய, பெமினிவத்த, பனாவல, யடியன்தொடை யட்டோகொட, தெரணியகல, பரகம்மன, ருவன்வெல்ல, பின்னவல, படுவத்த, தெதிகம, தெலிவல (இ) | 2020 ஜுன் 25 திகதிய இலக்கம் 08/2020 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | பிணை வைக்க வேண்டிய கமநல அபிவிருத்தி அலுவலர்கள், மத்திய நிலைய எழுதுனர் மற்றும் விவசாய ஆராய்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலர்கள் 336 பேர்களினால் பிணை வைப்பு செய்யப்பட்டிருக்க வில்லை. | தேவையான அறிவருத்தல் கிடைத்த பின்னர் குறித்த சுற்றறிக்கை பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் மற்றும் கடந்த ஆண்டின் செயற்பாட்டு விளைவுகள் அதன் வளர்ச்சி.\. வீழ்ச்சி பின்வருமாறு.

| கமநல செயற்குழுகளின் பெயர் | செயற்பாட்டு விளைவு மீளாய்வாண்டு | கடந்த ஆண்டு | செயற்பாட்டு விளைவுகளின் வளர்ச்சி.\.(வீழ்ச்சி) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பரகம்மன | 1,175,975 | 501,998 | 673,977 |
| யட்டோகொட | (349,574) | 559,198 | (908,772) |
| தெதிகம | 195,793 | 299,496 | (103,703) |
| அம்பேபுஸ்ஸ | 225,902 | 399,608 | (173,706) |
| படுவத்த | 547,311 | 406,036 | 141,275 |
| பின்னவல | 582,066 | 1,204,050 | (621,984) |
| தெலிவல | 36,913 | 902,128 | (865,215) |
| உஸ்ஸாபிடிய | 552,376 | 455,234 | 97,142 |

| | | | |
|---|---|---|---|
| அரநாயக, | 352,482 | 112,433 | 240,049 |
| ருவன்வெல்ல | 1,382,600 | 1,508,218 | (125,618) |
| தெரணியகல | 462,610 | (31,175) | 493,785 |
| யடியந்தொடை | 377,552 | 365,228 | 12,323 |
| பனாவல | 1,364,545 | 306,431 | 1,058,114 |
| பெமினிவத்த | 1,764,934 | 1,660,368 | 104,566 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| செயற்குழு /செயற்குழுகள் | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| யட்டோகொட | நாட் சம்பளத்தின் மீது சேவையில் ஈடுபடித்திய பெண் ஊழயர் ஒருவரின் சேவையை இடை நிறுத்தியதன் மீது செயற்குழுவிற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக ரூபா 636,080 இழப்பீடாக செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது. | அவ்வாறான தொகையொன்றை செயற்குழுவிற்கு செலுத்த நேர்ந்தது. | அரச சட்ட, விதிகளிற்கு இணங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| பெமினிவத்த | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 65 ஆம் விழாவை கொண்டாடுவதற்காக ரூபா 356,127 தொகை 2022 ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. அவற்றின் ரூபா 282,680 மாத்திரம் மீள்நிரப்புவதற்காக மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், 2023 மார்ச் அளவிலும் அந்த தொகை கிடைத்திருக்கவில்லை. 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையில் 03(xvi) பந்தி பிரகாரம் அரச நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் விழாகளிற்காக அரச நிதி பயன்படுத்தக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ள காலத்தினுள் இந்த விழா நடாத்தப்பட்டிருந்தது. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் 7/3/2/65-ANIVERSERY/22 மற்றும் 2022.09.29 திகதிய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கக வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| செயற்குழு /செயற்குழுகள் | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| பின்னவல , அம்பேபுஸ்ஸ, பனாவல , அரநாயக, ருவன்வெல்ல | இறுதி இருப்பினுள் நாற்றுகள், விவசாய உபகரணங்கள், விவசாய இரசாயனங்கள், வித்து மற்றும் பசளையின் கீழ் ரூபா 904,588 ஆன காலாவதியான இருப்புக்கள் நிலவின. | அத் இருப்பை புத்தகங்களிலிருந்து மற்றும் களஞ்சியத்திளிலிருந்து அகற்றுவதற்கு 2023 ஆண்டின் போது நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கிறேன். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| அரநாயக, உஸ்ஸாபிடிய, தெரணியகல, யடியந்தொடை | 2021 சிறு போகத்திற்காக இலவசமாக விநியோகிப்பதற்கு கிடைத்த திரவ பசளை 827 லிற்றர் மற்றும் பசளை 16529 கிலோகிராம் இனை 2023 பெப்ரவரி அளவிலும் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | உரிய காலத்தினுள் பசளை கிடைக்காதமை இதற்கு காரணமாகியிருந்தது. | உரிய காலத்திற்கு தேவையான பசளைகளை விநியோககிக்க வேண்டும். |

### 3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| செயற்குழு /செயற்குழுகள் | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| பெமினிவத்த, தெலிவல, படுவத்த, அம்பேபுஸ்ஸ, உஸ்ஸாபிடிய, அரநாயக, ருவன்வெல்ல, தெரணியகல, பனாவல, பின்னவல, யட்டோகொட, | நீண்ட காலமாக அறவிடப்படாது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கூட்டுத் தொகை ரூபா 14,682,675 ஆன 192 கடன்படுனர் மீதிகள் 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிடவும் கூட்டுத் தொகை ரூபா 11,911,161 ஆன 207 ஆன கடன்கொடுனர் மீதிகளை தீர்க்கவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான அறிவுருத்தல்களை பெற்று இந்த மீதிகளை தீர்ப்பதற்கு மற்றும் தகவல்களை உறுதி செய்து கொள்ள முடியாததன் மீது நிலவுகின்ற மீதிகளை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதற்கும், ஏகைய மீதிகள் தொடர்பாக கண்டறிந்து சரிசெய்யவும் நடவடிக்கை எடுத்தல். | நிலுவை கடன் மீதிகளை தாமதமின்றி அறவிடவும், கடன்கொடுனர் மீதிகளை தீர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| தெதிகம பரகம்பன பெமினிவத்த, அம்பேபுஸ்ஸ,பின்னவல | விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் வி.ஆ.உ.உ அலுவலர்களிற்கு வழங்கும் பொருட்களிற்குரியதாக மீளாய்வாண்டு இறுதியில் 92 அலுவலர்களிடமிருந்து | சம்பளத்திலிருந்து அறிவட நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை் மீதிகளை தாமதமின்றி தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 3,513,516 தொகை கிடைக்க வேண்டியதாக காணப்பட்டதுடன், அவற்றில் 51 பேர்களிற்கு வழங்கிய பொருட்களிற்காக ரூபா 2,192,450 தொகை 01 ஆண்டு மற்றும் 05 ஆண்டுகளிற்கு இடையிலான காலம் கடந்திருந்த போதும், தீர்க்கப்பட்டிருக்கவில்லை. விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் வழங்கும் பொருட்களிற்காக பணத்தை தீர்க்க குறிப்பான காலஎல்லையையும் இனங்கண்டிருக்கவில்லை. | | |
| யடியன்தொடை | தரைப்படையினால் 1992 ஆண்டில் எடுத்துச் சென்ற கிரயம் ரூபா 1,066,845 ஆன டெக்டர் மற்றும் டேலர் ஒன்றினை மீள் பெற்றுக் கொள்ள இதுவரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பான தகவல்களை அறிய முடியாதுள்ளதால் கணக்குகளிலிருந்து அகற்ற முடியாதுள்ளது. | குறித்த சொத்தை மீள் பெற்றுக் கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| **செயற்குழு /செயற்குழுகள்** | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| அரநாயக | 2021 ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கிரயம் ரூபா 256,000 ஆன "பொலிடனய" மற்றும்"செவன வீடு" கணக்காய்வு திகதியான 2023 ஏப்ரல் 21 திகதியளவில் குறைபயன்பாட்டுடன் நிலவியன. | இந்த சொத்துக்களில் பராமரிப்பு நடவடிக்கை பலநோக்கு அபிவிருத்தி அலுவலர்களிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனுள் பயிர்செய்கை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சொத்துகளை பயன்பாடின்றி வைத்திருக்கக் கூடாது. |
| தெதிகம | வாராந்த சந்தை நடாத்துவதற்காக மத்தியநிலைய வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் 03 ஆண்டுகள் காலமாக பயன்பாடின்றி | புதிய விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டதால் இந்த வாராந்த சந்தைக்கு விவசாயிகளின் வருகை குறைந்துள்ளன. அதனால் வியாபாரிகள் இங்கு பண்டங்கள் விற்பனை | சொத்துகளை பயன்பாடின்றி வைத்திருக்கக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | நிலவியது. | செய்ய வருவதனை நிராகரித்திருந்தனர். | |
| யடியந்தொடை | டெக்டர் ஒன்றின் திருத்ததைத் அறைவாசி பூர்த்தி செய்து ரூபா 187,600 ஆன எஞ்சியதனை பூர்த்தி செய்ய தேவையான அங்கீகாரத்திற்காக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிற்கு அனுப்பியுள்ள போதும், 2023 ஏப்ரல் மாதமளவிலும் அத் தொகை கிடைக்காததனால் டெக்டரை தொடர்ந்தும் ஊர்த்திச்சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | டெக்டரை திருத்துவதற்காக கொடுப்பனவு செய்ய கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் மேற்கொள்ள எதிர்பார்க்கிறேன். | சொத்துகளை பயன்பாடின்றி வைத்திருக்கக் கூடாது. |
| யட்டோகொட | சபை வளவில் உள்ள கேகாலை மாவட்ட கமநல பயிற்ச்சி மத்திய நிலைய கட்டிடம் பல வருடங்களாக பழுதடைந்து, விளைவற்று நிலவிது. | இந்த கட்டிடத்தை திருத்துவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், எதிர் காலத்தில் அதனை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துகளை பயன்பாடின்றி வைத்திருக்கக் கூடாது. |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| **செயற்குழு /செயற்குழுகள்** | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| பரகம்மன, ருவன்வெல்ல, அம்பேபுஸ்ஸ, பின்னவல, பனாவல, பெமினிவத்த, யடியந்தொடை, தெலிவல | 08 சபை அதிகார பிரதேசங்களில் காணப்பட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் 320 பிரிவுகளின் 2022 திசெம்பர் 31 திகதிக்கு 99 பிரிவுகளில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் அலுவலர்களின் வெற்றிடங்கள் | இது தொடர்பாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தை அறிவுருத்தப்படட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன், அவ் வெற்றிடங்கள் காணப்பட்ட காலம் 02 ஆண்டுகளும் 05 ஆண்டுகளும் இடைலான கால விச்சளவில் ஆனது. | | |

**4. கமநல வங்கிகள்**

| **செயற்குழு /செயற்குழுகள்** | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| அம்பேபுஸ்ஸ, பரகம்மன, யட்டோகொட, பின்னவல, பனாவல, தெதிகம, உஸ்ஸாபிடிய, படுவத்த, தெலிவல, அறனாயக, தெரணியகல | 1537 கடனாளர்களின் 2022 திசெம்பர் 31 திகதியன்று நிலுவை மீதி ரூபா 56,130,220 ஆனதுடன் அம்மீதியினுள் எவ்வித தவணையையும் செலுத்தாத 227 பேர்களிடமிருந்து ரூபா 15,178,006 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | நிலுவை கடனை அறவிடுவதற்காக் திட்டம் தயாரித்தல், அலுவலர்களை அறிவுருத்தல், மீதிகளை பதிவழிக்க ஆலோசனை கோரல், கடன்படுனர்களை எழுத்து மூலம் அறிவுருத்தல் போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தன | நிலுவை கடனை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |